# தெஹியோவிட்ட பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தெஹியோவிட்ட பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெஹியோவிட்ட பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2009 ஆம் ஆண்டின் போது 2010 ஆம் ஆண்டிற்காக கிடைத்திருந்த ஏக்கர்வரி ரூபா 42,309 தொகையானது கணக்குகளில் காணப்பிக்கப்படாமையினால் வருடத்தின் வருமானம் அத் தொகையினால் குறைவாகவும் 2010 சனவரி 01 ஆந் திகதி அறவிட வேண்டியிருந்த ஏக்கர்வரி ரூபா 92,374 தொகையானது குறைவாக கணக்குகளில்

காண்பிக்கப்பட்டமையினால் வருமானம் அத்தொகையினால் குறைவாகவும் மற்றும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஏக்கர் வரி ரூபா 49,453 தொகையானது கணக்குகளில் காண்பிக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் மொத்த ஏக்கர் வரி வருமானம் ரூபா 85,250 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம் பதிவழித்தல்கள் ரூபா 43,692 தொகையாக இருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 100,939 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தமையினால் வருடத்தின் ஏக்கர் வரி வருமானம் ரூபா 57,247 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாற்றப்படாதிருந்த நிலையான வைப்புக்களின் பெறுமதியான ரூபா 1,700,000 தொகையானது அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டு காசேட்டில் செலவு வைப்பதற்குப் பதிலாக மிகை பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவுவைத்து அதன் வருமானத்தலைப்பு 2.4.3 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டமையினால் வருமானம் அத்தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 6,000,000 கடன் பணத்திலிருந்து மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெகோ இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தகனக் கூடத்தின் பெறுமதியான ரூபா 9,225,930 ஆனது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 11,800,000 கடன் தொகையானது கணக்கு வைக்கப்படாமையினால் ஐந்தொகையில் அப் பொறுப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மேற்கூறப்பட்ட கடன் பணத்தைத் தீர்ப்பதற்காக சபையினால் செலுத்தப்பட்ட கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி என்பன நிலையான கட்டளையின் பிரகாரம் வங்கியினால் செலுத்தப்படுகின்றமையினால் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று நாளதுவரையாக தயாரிக்கப்பட்டிராமையின் காரணமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்ததுடன் கணக்கு வைத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஏ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மூலதன வட்டி ரூபா 918,424 ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் முதலீடுகளின் பெறுமதி ரூபா 700,000 ஆக இருந்தமையினால் உரிய வட்டியினைக் கணிப்பிட்டு கணக்கு வைக்கப்படுவதற்குப் பதிலாக அதிகமான வட்டித் தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டியாக ரூபா 2010 பெப்ரவரி 01 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 221,850 தொகையானது முன்னைய வருடத்திற்காகக் கிடைத்திருந்த வருமானமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 13,438 தொகையான முதலீட்டு வட்டி வருமானம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பதிவேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,200,000 தொகையாக இருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 15,450,675 தொகையாகக் காண்பிக்கப்பட்டமையினால் வருடத்தின் போதான பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,250,675 வினால் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 4,507,344 ஆனது வருடத்தின் வருமானமாக கணக்கு வைக்கப்படுவதற்குப் பதிலாக பொது வைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(க) 2010 திசெம்பர் 31 ஆந் திகதி பதிவேட்டின் பிரகாரம் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,500,000 ஆன போதிலும் கணக்குகளில் ரூபா 8,308,862 என காண்பிக்கப்பட்டமையினால் வருடத்தின் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,808,862 இனால் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்பு மீதி ரூபா 121,217 ஆனது ரூபா 77,024 என காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 44,193 இனால் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 880,657 தொகையான அபிவிருத்திப் பொருட்கள் மீளாய்வாண்டின் போது கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(கீ) 2008 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 782,806 தொகையான கடன் பணக் கணக்கின் வரவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

03 கணக்கு விடயத்துக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,086,398 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,496,277 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான தொங்கல் கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,553 ஆக இருந்தது.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,702,776 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

**தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 37,708,501 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| | 170 ஆம் பிரிவு | பாதீட்டினை பிரேரிக்கின்ற போது செலவினங்களை விமர்சிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது சில செலவுத் தலைப்புக்களின் மதிப்பீட்டு செலவினத்தை விஞ்சிய செலவினங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2006 மார்ச் 31 ஆந் திகதிய 2006 இன் 12 ஆம் இலக்க முத்தரை கட்டண (விசேட அறிவுறுத்தல்கள்) அதிகாரச் சட்டம் | ஒவ்வொரு வருடத்தினதும் காலாண்டு முடிவடைந்து 15 தினங்களுக்குள் அறவிடப்பட்ட முத்திரை வரிப்பணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட |

| | |
|---|---|
| 7(i) ஆம் பிரிவு | வேண்டியிருந்த போதிலும் 2008 இன் மூன்றாம் காலாண்டிலிருந்து 2009 இன் நான்காம் காலாண்டு வரையும் அறவிடப்பட்டிருந்த ரூபா 72,127 தொகை சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை | |
| (i) விதி 166 | மீளாய்வாண்டில் பிரதான பேரேட்டுக்கு ஆரம்ப மீதியினை உள்ளடக்குவதற்காக நாட்குறிப்புப் பதிவுகள் உபயோகிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) விதி 168 | முன்னைய வருடத்திற்கான கணக்குப் பொழிப்பின் பிரதியொன்று கணக்காய்விற்காக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பிரதேச சபை கலைக்கப்பட்டிருந்தமையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகச் செயற்பட்ட பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல்கள் இன்றி கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 395(ஈ) | ஒவ்வொரு மாத முடிவின் போதும் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தினால் பராமரிக்கப்படுகின்ற |

| | |
|---|---|
| | 2235101 , 2235102 மற்றும் 2235125 ஆம் இலக்க வங்கிக் கணக்குகளுக்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் இறுதியாக 2009 திசெம்பர் மாதம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது. |
| நி.பி 387 | காசோலை மூலமான கொடுப்பனவுகளுக்காக தமது வங்கி மீதி போதியளவானதாக உள்ளதா என உத்தியோகத்தரினால் ஆராய்ந்து பார்த்து செயற்படவேண்டியிருந்த போதிலும் 0002235101 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்காக அவ்வாறு ஆராய்ந்து பார்க்காமல் செயற்பட்டிருந்தமை 2010 ஏப்ரல் வங்கிக்கூற்றின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. |
| நி.பி 756 | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு அண்மையிலாவது பொருட்கள் சம்பந்தமாக வருடாந்த மெய்மையாய்விற்காக மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 மே 25 ஆந் திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

(உ) 1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ளூராட்சி உபவிதிகளின் XXII ஆம் பகுதியின்

| | |
|---|---|
| 21 ஆம் பிரிவு | மூடிய பாதுகாப்பான வாகனத்திலோ அல்லது மூடப்பட்ட கூடாரமொன்றிலோ அல்லது வேறு சிறந்த வழிகளிலோ இறைச்சியைக் கொண்டு செல்வதற்கான |

| | |
|---|---|
| | போக்குவரத்து நடைபெற வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக முச்சக்கர வண்டிகளில் போக்குவரத்திற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) 2006 செப்தெம்பர் 21 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப இலக்கம் 2006/03 இன் அறிவுறுத்தல் இலக்கம் 1 | சேவைப் பிரமாணங்களின் கீழ் சேர்க்கப்பட முடியுமான பதவிகள் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நூலக உதவியாளர்கள் இருவர் சேர்க்கப்பட்டிருந்தனர். |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,866,868 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,953,159 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 கிடைக்க வேண்டிய வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | 2009 |
|---|---|---|

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 1,343 | 2,049 | 3,595 | 1,353 | 85 | 4,062 |
| (ii) | வாடகை | 2,724 | 2,135 | 685 | 2,730 | 2,723 | 81 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 540 | 562 | - | 460 | 460 | 156 |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | - | - | - | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 8,308,862 தண்டப்பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 15,450,675 கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 நிலுவை ஆதனவரியும் ஏக்கர் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஏதாவது ஆதனவரியோ அல்லது ஏக்கர் வரியோ செலுத்தாமை சம்பந்தமாக அவ்வரி அறவிடவேண்டிய இடங்களினது உரிமையாளர்களின் சொத்துக்களைத் தடைசெய்து விற்பனை செய்தன்மூலம் அவ்வரித் தொகையினை அறவிட முடியுமான போதிலும் வட்டார இலக்கம் 2 இல் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 220,132 தொகையான நிலுவை வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 இறைச்சிக்கடை மற்றும் மீன்கடைகளின் நிலுவை வாடகை

1991 ஆம் ஆண்டிலிருந்து 1997 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் வாடகை தரவேண்டிய இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணமாக ரூபா 94,701 பணமாக அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.6 வருமானம் அறவீடு செய்வதிலுள்ள பலவீனங்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருமான அறவீட்டு முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 4,622,192 ஆக இருந்தும் வருமான அறவீடு பலவீன நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 41,437,627 ஆக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 32,597,086 ஆக இருந்தமையால் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,840,541 இனால் குறைந்து காணப்பட்டது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 23,411 | 17,822 | 5,589 | 15,795 | 16,025 | (230) |
| ஏனையவை | 9,406 | 5,908 | 3,498 | 9,325 | 3,786 | 5,539 |
| உப மொத்தம் | 32,817 | 23,730 | 9,087 | 25,120 | 19,811 | 5,309 |
| மூலதனச் செலவினம் | 22,213 | 10,194 | 12,019 | 25,252 | 9,953 | 15,299 |
| மொத்தம் | 55,030 | 33,924 | 21,106 | 50,372 | 29,764 | 20,608 |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| புதவி நிலைத்தரங்கள் | 02 | 02 |
| இரண்டாம் தரத்தினர் | 22 | 20 |
| ஆரம்ப தரத்தினர் | 37 | 31 |
| வேறு (அமைய /தற்காலிக) | -- | 20 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,518,739 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,518,739 ஆக இருந்தது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,490,635 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 286,014 ஆக இருந்தது.

### 2.5.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 44,050 ஆக இருந்தது.

## 2.6 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 20,311,279 ஆக இருந்தது.

## 2.7 நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள்

உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 செப்தெம்பர் 02 ஆந் திகதிய எஸ்எல்ஜீ/01/பாதீடு ஆம் இலக்கக் கடிதத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிதி உதவிகளை ஈடுபடுத்தக்கூடிய விஷேட செயற்பரப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 525,750 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடமொன்றிற்கு மேலாக காணப்படுகின்ற ரூபா 4,553 தொகையான தொங்கல் கணக்கு மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் பாதீட்டில் ஐந்து நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 47 செலவினத் தலைப்புக்களுக்காக ரூபா 13,403,810 தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச் செலவினத் தலைப்புக்களில் எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.9 செயலாற்றல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்காமைகள், நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்களின் முரண்களுக்கான செயல் வழிமுறைகள் இன்மையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

## 2.10 ஒப்பந்த நிருவாகம்

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 200,000 ஆன 02 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள் காணப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு